1993 மார்ச் 18]

122—

உயர்நீதி மன்றத்திற்கு அமைச்சுப் பணியாளர் தேர்வின் போது ஆதி திராவிடர்களுக்கு உரிய இட ஒதுக்கீடு.

* 9676—திரு. ஆ. சுப்புரத்தினம்:
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நீதி மன்றத்திற்கு அமைச்சுப் பணியாளர் தேர்வு செய்யும்போது ஆதி திராவிடர்களுக்கு உரிய விகிதாசாரப்படி இட ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இட ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இட ஒதுக்கீடு சரியாகக் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறதென ஹைக்கோர்ட் தகவல் அளித்து உள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணிகளில் 18 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டுமென்பது அரசியல் அமைப்புச் சட்ட ரீதியாக ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கக்கூடிய ஒரு உரிமையாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அவர்களுக்குக் கிடைத்த தகவலின்படி அந்த முறை செயல்படுத்தப்படுவதாகத் தெரிவித்தார்கள். ஆனால் நான் நன்கு அறிந்த வரை இந்த இட ஒதுக்கீடு, முறையாக நம்முடைய உயர்நீதி மன்றத்தில் பின்பற்றப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து அதை அவர்கள் பின்பற்றுமாறு ஆவன செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றம் அந்தத் தகவலை அரசுக்கு அளிக்கவில்லை. மீண்டும் உயர்நீதி மன்றத்திற்கு எழுதி எத்தனை பேர் ஜுடிஷியல் மினிஸ்ட்டீரியல் ஸ்டாப்பிலே பணியாற்றுகின்றார்கள்; அதில் 18 சதவீதம் நம்முடைய தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கிறதா என்ற விவரத்தை உயர்நீதி மன்றத்திற்கு எழுதி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 18 சதவீத இட ஒதுக்கீடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்கிற தகவலை உயர்நீதி மன்றம் அளித்து இருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டார்கள். பொதுவாகவே இப்படிப் பட்ட கேள்வி எழுகிறபோது ஒவ்வொரு துறையினரும் அந்தத் துறையிலே இருக்கிற ஸ்கேவெஞ்சர்ஸ் வாட்ச்மென் பியூன்ஸ் இவர்களையெல்லாம் சேர்த்துக் கொண்டு 18 சதவீதம் நிரப்பப் பட்டுவிட்டது என்கிற கணக்கைச் சொல்லுகிறார்கள். கிளாஸ் 1 ஆபீசர்ஸ்; கிளாஸ் 2 ஆபீசர்ஸ் என்று தரவாரியாக இட ஒதுக்கீடு செய்யப்படுவதுதான் முறையான ஒதுக்கீடாக இருக்கும்.

முற்பகல் 10—10.

எனவே இத்தகைய விவரங்களைத் தந்து விட்டு ''நிரப்பப் பட்டுவிட்டது'' என்று சொல்வது சரியான விவரமாக இருக்காது. உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரையிலே ரெஜிஸ்ட்ரார். அசிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ரார் டெபுடி ரெஜிஸ்ட்ரார் என்று 15 உயர் பதவிகள் இருக்கின்றன. இந்த 15 உயர் பதவிகளிலும் ஒரு தாழ்த்தப்பட்டவர் கூட இல்லை. அதற்கு அடுத்துள்ள அமைச்சுப் பணியிலும் அதே நிலைமை இருக்கிறது. எனவே அந்த பேக்லாக்ஸ்-ஐயாவது- நிலுவை என்று சொல்லப்படுகிற அந்த பேக்லாக்ஸ்-ஐ மீண்டும் நிரப்பிட அரசு பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தமிழரசன் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்களை வைத்து உயர்நீதிமன்றத்திற்கு எழுதித்தகவல் அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 123, திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

123—

அங்கீகரிக்கப்படாத மனைகள் விற்பனை.

* 9714—திரு. வி. கே. லட்சுமணன்:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

அங்கீகரிக்கப்படாத மனைகள் விற்பனைக்கு வந்தால் அவைகளைப் பதிவு செய்யாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?